காத்தான்குடி நகர சபை - 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காத்தான்குடி நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காத்தான்குடி நகர சபையின் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கவசிமா இயந்திரம் பொருத்துவதற்கு ரூபா 67,907,157 செலவில் அமைக்கப்பட்ட கட்டடம் மற்றும் ரூபா 22,858,774 செலவில் கட்டப்பட்ட நிர்வாகக் கட்டடம் என்பன நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடப்பு ஆண்டில் தங்களது ஆலோசனைக்கமைவாக செயற்படுத்தப்படும். | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு காலத்தில் நூலகங்களுக்கு அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற 3,352 எண்ணிக்கையான புத்தகங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டவும் மற்றும் அழிக்கப்பட்ட 175,043 ரூபா பெறுமதியான நூலகப் புத்தகங்களின் பெறுமதியினை சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | நூலகத்திற்கு அன்பளிப்பாக பெறப்பட்ட புத்தகங்களின் விலைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அழிக்கப்பட்ட புத்தகத்திற்கான பெறுமதியும் சேர்த்து நிகழ்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | நூலகங்களின் புத்தகப் பெறுமதியை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,273,371,337 பெறுமதியான 09 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி உறுதிகளைப் பெறுவதற்கும் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பான ஆவணங்களைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் ஆவணங்களைப் பெற்று ஆவணப்படுத்த வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைப்பு விடுதிகள் அமைச்சி நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2020 மார்ச் 02 ஆந் திகதியில் 29 ஆம் இலக்க சுற்றறிக்கை | கட்டட அனுமதிப்பத்திரம் அனுமதித்தலானது 14 நாட்களுக்குள் நிறைவேற்றப்படல் வேண்டும். எனினும், கட்டட அனுமதியானது மீளாய்வாண்டில் 06 தொடக்கம் 11 மாத காலத்துக்குப் பின்னரே சபையில் வழங்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. | எதிர்காலத்தில் இது விடயமாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | விரைவாக கட்டட அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 9,567,389 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 9,523,357 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2021 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 21,612,000 | 22,371,641 | 20,367,473 | 11,594,381 | 21,258,000 | 19,956,284 | 20,229,692 | 9,590,213 |
| வாடகைகள் | 12,420,000 | 7,495,627 | 7,287,527 | 208,100 | 8,905,000 | 6,366,269 | 6,366,269 | -- |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,060,000 | 4,088,230 | 4,073,780 | 38,000 | 4,060,000 | 3,671,125 | 3,666,125 | 23,550 |
| ஏனைய வருமானம் | 124,804,000 | 100,644,294 | 100,582,287 | 5,614,576 | 45,475,000 | 86,667,192 | 86,673,612 | 5,552,569 |
| | 162,896,000 | 134,599,792 | 132,311,067 | 17,455,057 | 79,698,000 | 116,660,870 | 116,935,698 | 15,166,332 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வைகள்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியின்படி, கடந்த 5 வருடங்களாக கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 6,245,270 பெறப்பட்டிருக்க வேண்டும். | குறித்த முத்திரை தீர்வைக்கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முத்திரைத் தீர்வைக்கட்டணங்கள் தொடர்பான விபர ஆவணங்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக கடந்த 05 வருடங்களுக்கு மேலாக காட்டப்பட்டு வருகின்ற நீர்வழங்கல் கடன் தொகையான ரூபா 6,643,239 இனைச் செலுத்துவதற்கு அல்லது பதிவழிப்பதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகை நீண்டகாலமாக உள்ளது. தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் மேலதிக நடவடிக்கைக்கான அனுமதிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | நீர்வழங்கல் கடன் தொகையை செலுத்துவதற்கு அல்லது பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணி, கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடப்பு ஆண்டில் நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான குழு அமைக்கப்பட்டுள்ளது. விலை மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | காத்தான்குடி கடைத்தொகுதி வேலைத்திட்டத்திற்கான முறையான நிதி ஏற்பாடு செய்யப்படாத போதிலும், சபையினால் பத்திரிகை விளம்பரம் மூலம் விலைமனு கோரப்பட்டு விளம்பரச் செலவாக ரூபா 142,311 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இவ்வேலைத்திட்டம் நிதியின்மை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டத்தினை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் பழுதடைந்து காணப்படுகின்ற 05 வாகனங்களை திருத்துவதற்கும் மற்றும் பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 06 வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இழுவைப் பெட்டிகள் உள்ளடங்கலாக காணப்படுகின்ற 09 வாகனங்களுக்கான பதிவுப் புத்தகமானது, சபையில் காணப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களுக்கான பதிவுப் புத்தகங்களை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களுக்கான பதிவுப் புத்தகங்களை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 12 பதவிகளுக்கு 27 வெற்றிடங்களும், 12 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றனர். | சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வெற்றிடமாகவுள்ள ஆளணி தொடர்பாக கோரிக்கை விடப்பட்டும் எவ்விதமான முன்னேற்றமும் எட்டப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **ஊழியர் கடன்**<br>சபையினால் 02 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் மற்றும் ஏனைய கடன் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 315, 000 தொகையினை கடந்த 07 வருட காலமாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த உத்தியோகத்தர்களது மாதாந்த ஓய்வூதியப் பணத்திலிருந்து அறவிடப்பட்டு வருகின்றது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |